# தேஷ் பயணம்!

ரிப்போர்ட் போயிருக்கிறதாம். ஒரு பக்கம் கட்சித் தொண்டர்களின் செலவுக்குக் கூட பணம் கொடுக்கும் அமைச்சர்கள். இன்னொரு பக்கம் கெடுபிடி வசூல் செய்யும் கட்சி நிர்வாகிகள் என்ற நிலை”

“அடடே....”

“இது ஒருபுறமிருக்க, மாநாடு நடைபெறும் கோவையிலேயே சில இடங்களில் வளர்ச்சிப் பணிகள் அதற்குரிய வேகத்தில் நடைபெறவில்லை என்ற ‘ஆதங்கக் குரல்’ கொங்கு மண்டலத்தில் எதிரொலிக்கிறது. பிளாட்ஃபார்ம்கள் பல போட்ட இடத்திலேயே வாய் பிளந்து நிற்கின்றனவாம். இதுபற்றி முணுமுணுக்கும் கொங்கு மண்டலப் பிரமுகர்கள், ‘முதல்வர் போதிய நிதி ஒதுக்கினார். ஆனால் அதிகாரிகளுக்குக் கிடைத்த குறுகிய காலகட்டத்தில் அத்தனை வளர்ச்சிப் பணிகளையும் ஜோராகப் பண்ண முடியவில்லை. இதனாலேயே கொங்கு மண்டலத்தில் ஒரு விதமான அதிருப்தி ஏற்படும் ஆபத்து இருக்கிறது’ என்றார் விரக்தியுடன்”

“ஒரு பிரம்மாண்டமான நிகழ்ச்சி நடக்கிறதென்றால் சில குறைகள் இருக்கத்தான் செய்யும். நெக்ஸ்ட்”

“18 அம்சத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டு உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்தட்டும்’ என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தது குறித்து அக்கட்சியில் உள்ள முன்னணித் தலைவர்களே, ‘எங்கள் அம்மாவின் அப்ரோச் சரியில்லை. இலங்கை அரசு செய்ய வேண்டிய விஷயங்களை தமிழ்நாட்டில் உள்ள அரசுக்கும், மத்திய அரசுக்கும் சொல்லி என்ன பிரயோஜனம்? தமிழ்நாட்டில் உள்ள மின் வெட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சினை, வழக்கறிஞர்கள் போராட்டத்தை ஹைலைட் பண்ணிப் பேசினால்தானே தமிழக வாக்காளர்கள் நம் பக்கம் வருவார்கள்’ என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

இதுஒருபுறமிருக்க, கூட்டணி விஷயத்தில் கொடநாட்டில் இருக்கும் ஜெ. எந்த முயற்சியிலும் இறங்கவில்லை என்பதே அங்கிருந்து கிடைக்கும் தகவல். ஆனால் தமிழகத்தில் இருந்து ஒரு தொழிலதிபரும், கர்நாடகாவிலிருந்து ஒரு தொழிலதிபரும் ஜெ.யை சந்தித்துள்ளார்கள் என்று பரபரப்பாகப் பேசப்படுகிறது. ‘விஜயகாந்துடன் கூட்டணி வைக்க வேண்டும்’ என்று அ.தி.மு.க.வில் ஒரு தரப்பு சொன்னாலும், இன்னொரு தரப்போ, ‘அவருக்குத் தொகுதிக்கு 10,000 வாக்குகள்கூட இல்லை. அவரைச் சேர்த்தால் நாம் வெற்றி பெற்றுவிட முடியுமா? காங்கிரஸ்தான் வேண்டும்’ என்று கூறுகிறதாம். அதே நேரத்தில் விஜயகாந்த் தரப்பிலோ ‘துணை முதல்வர் பதவி என்பதற்குக் குறைந்து எந்த விதத்திலும் அ.தி.மு.க.வுடன் கூட்டணி பேசக் கூடாது’ என்கிறார்களாம். குறிப்பாக



ராஜேந்திரன்



அர்ச்சனா ராமசுந்தரம்

